# தினசரி சந்தை நிலவரத்தால் மாறிய மாற்றம்



V.பரமசிவம்
த/பெ A.வீரத்தேவர்
4/26, மொட்டையநாயக்கன்பட்டி
கருமாத்தூர் (Po)
உசிலம்பட்டி (Tk)
மதுரை (Dt)
9943338147

மதுரை மாவட்டம் கருமாத்தூர் பகுதியில் வசித்து வரும் V.பரமசிவம் ஆகிய நான் கடந்த பல வருடங்களாக எனது நிலத்தில் கத்திரிக்காய், வெண்டை, சம்பங்கி, புடலங்காய், சுரைக்காய், கொத்தவரை மற்றும் தக்காளி ஆகிய பயிர்களை பயிரிட்டு விவசாயம் செய்து வருகிறேன். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தினசரி சந்தை நிலவரம் (www.indg.in) ஏற்படுத்திய மாற்றம் மற்றும் எனது அனுபவங்களை மீண்டும் ஒருமுறை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம்.

மதுரை மாவட்டத்தில் காய்கனிகளுக்கான தேவைப்பாடும் அதனைத் தொடர்ந்து தட்டுப்பாடும் அதிகரித்து வருகிறது. இதனால் காய்கனிகளின் விலை உள்ளூர் சந்தையிலும் தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களிலும் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. சென்ற 2009-ம் ஆண்டு அக்டோபர் - நவம்பர் மாதத்தில் சராசரியாக 1 முதல் 3 டன் வரை சம்பங்கி கத்தரிக்காய், வெண்டைக்காய், தக்காளி ஆகிய காய்கனிகளை எனது நிலத்தில் விளைவித்து உள்ளூர் சந்தைக்கும் கணிசமாக பிற சந்தைக்கும் ஏற்றுமதி செய்தேன். மற்ற சந்தைகளில் காய்கனிகளை விற்பனை செய்வதற்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தெரிவித்த தினசரி சந்தை நிலவர (DMI) விலைப்பட்டியல் எனக்கு மிகப் பெரிய உதவியாக அமைந்தது.

நடப்பு ஆண்டில் மதுரை மாவட்டத்தில் ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான நான்கு மாத காலத்தில் சீதோஷ்ண மற்றும் தை முதல் சித்திரை மாத விழா நிலவரங்களும் மேலும் அதிகரிக்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. 2009-ம் ஆண்டு டிசம்பர் வரையில் தமிழ்நாட்டின் முக்கியமான காய்கனி

சந்தைகளான கோயம்புத்தூர், ஒட்டன்சத்திரம், மதுரை ஆகிய சந்தைகளில் வெண்டைக்காய், கத்தரிக்காய், தக்காளி, வெங்காயம், உருளைக்கிழங்கு போன்ற காய்கனிகளின் தேவைப்பாடும் விலையும் மிகவும் அதிகரித்திருந்தது. இந்த நிலையில் உள்ளூர் சந்தைகளிலும் காய்கனிகளின் விலை கடுமையாக உயர்ந்தது.

உள்ளூர் சந்தைகளில் கத்தரிக்காய், வெண்டைக்காய், வெங்காயம், பச்சை மிளகாய், முருங்கைக்காய், போன்ற காய்கனிகளின் வரத்து குறைவினால் சென்ற மாதங்களில் ஒரு கிலோ கத்தரிக்காய் ரூ.50, உருளைக்கிழங்கு ரூ.30, பச்சை மிளகாய் ரூ.20, தக்காளி ரூ.40, பீன்ஸ் ரூ.40, காரட் ரூ.40 க்கு விலை போனது. நடப்புச் சந்தையில் மட்டுமின்றி முன்பேர வர்த்தக சந்தைகளில் சமையல் பொருட்கள் மற்றும் காய்கனிகளின் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. கடந்த டிசம்பர் மாதத்தில் தக்காளி ஒரு மூட்டைக்கான (40 கிலோ வரை) விலை ரூ.1600 முதல் 2000 வரை இருந்தது. இது இன்றைய தேதியில் ரூ.1800 முதல் 2300 வரை இருக்கிறது. மேலும் நான் பயிரிட்டுள்ள பகுதிகளில் சம்பங்கி, கத்தரிக்காய், வெண்டைக்காய், தக்காளி ஆகிய காய்கனிகளின் அறுவடை நிறைவடைந்துள்ளது. இந்த நிலையில் விலை நல்ல அளவில் உயர்ந்துள்ளதால் நானும் என்னை போன்ற விவசாயிகளும் நாங்கள் விளைவித்த காய்கனிகளை உள்ளூர் சந்தைக்கும் பிற மாவட்டங்களின் சந்தைகளுக்கும் விற்பனை செய்வதில் ஆர்வம் காட்டி வருகிறோம். பிற மாவட்டங்களின் சந்தைகளில் காய்கனிகளை விற்பனை செய்வதற்கு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் தினசரி சந்தை நிலவரம் (DMI) எங்களது வியாபாரத்திற்கு மிகவும் இன்றியமையாததாக இருக்கிறது. எங்களது விவசாய உழைப்புக்கு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் உயிர் கொடுத்துள்ளது.

வரும் காலங்களில் தமிழகம் மட்டுமில்லாமல் இந்தியாவின் பிற மாநிலங்களிலும் உள்ள விவசாய சந்தைகளின் தினசரி சந்தை நிலவரத்தினை அறிமுகப்படுத்தினால் நானும் என்னை போன்ற பல விவசாய மக்களும் இன்னும் முனைப்போடு விவசாயம் செய்வதோடு அல்லாமல் எங்கள் வாழ்வில் மேலும் பல முன்னேற்றங்கள் அடைவோம் என்று கூறி வேளான் விஞ்ஞானிகளுக்கு மீண்டும் ஒரு முறை என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.